*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.சந்தியா க/பெ. உத்திரகுமார்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 03.25 A.N

**முதல் விசாரணை**

1) நான் செந்தாரப்பட்டியில் குடியிருந்து, வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், எனது அம்மாவின் வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 23.04.2023 அன்று மாலை 05.30 மணியளவில் நான், எனது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது வெங்கடேஷ் வந்து என்னிடம், எதிரியின் மனைவிக்கு வளைகாப்பு என்று சொல்லி என்னை அழைத்தார்.

2) அதற்கு நான், என் அம்மாவிடம் சொல்லுங்கள், எனது அம்மா வருவார், என்னால் வரமுடியவில்லை, நான் வரமாட்டேன் என்று சொன்னேன். அதற்கு எதிரி வெங்கடேஷ், என்னை தேவடியா என்று கெட்டவார்த்தையால் திட்டி, நான் சொல்றன், நீ வரமாட்டியா என்று சொல்லிக்கொண்டே எனது முடியை பிடித்து இழுத்து வலதுபக்க காதின்மீது, அவரது கையால் அடித்துவிட்டார்.

3) எனக்கு வலி அதிகமாக இருந்ததால், நான் எனது கணவரிடம் சொல்லி தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு 9 மாத கைக்குழந்தை இருந்ததால் என்னால் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொள்ள முடியவில்லை. நான் ராசிபுரத்திலேயே தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

4) நடந்த சம்பவத்தை குறித்து தம்மம்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 03.33 A.N

ஒம்/–C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.நல்லுசாமி த/பெ. அழகன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 03.34 A.N

**முதல் விசாரணை**

1) நான் செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி சந்தியா எனது மருமகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும், செந்தாரப்பட்டி, 4 வது வார்டில் வசித்து வருகிறார்.

2) கடந்த 23.04.2023 அன்று எனது மருமகள் அவரது அம்மா வீட்டிற்கு சென்றிருந்தார. அன்று மாலை 05.30 மணியளவில் பாத்ரூம் சென்றுவிட்டு, சந்தியா அவரது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது வெங்கடேஷ் எனது மருமகளை வழிமறித்து வெங்கடேசின் மனைவிக்கு வளைகாப்பு என்று சொல்லி அழைத்ததாகவும், அதற்கு எனது மருமகள் என்னால் வரமுடியாது என்று சொன்னதாகவும், அதனால் வெங்கடேஷ், நீ வந்து எனது மனைவியை வாழ்த்திட்டுபோ, நா உன்ன கல்யாணம் பண்ணிக்கிற என்று சொன்ன, நீதான் கேட்கல வேற ஒருத்தன கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்ட இருந்தாலும் நீயும் என்மனைவிதான், நீ வந்து வாழ்த்து சொல்லனும் என்று சொல்லி எனது மருமகளின் தலைமயிரை பிடித்து இழுத்து, காதின் மீது அடித்து என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையிலதான் என்று சொல்லி மிரட்டியதாகவும், அதனால் பயந்துகொண்டு எனது மருமகள், எனது மகனுக்கு தகவல் சொல்லி, எனது மகன், என்னிடம் தகவல் சொன்னார்.

3) எதிரி அடித்ததில், எனது மருமகளுக்கு காது மற்றும் மண்டை வலி இருப்பதாக சொன்னதால், எது மருமகளை, எனது மகன் தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். நான் சம்பவயிடம் சென்று விசாரித்து தெரிந்துகொண்டேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 03.41 A.N

ஓம்/—C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.